**O.S. No. 97/2022**
**Date : 26.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 1 **திரு. தூயமணி**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் ஓய்வு பெற்ற துணைவேந்தர் என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் பிராது முதல் விசாரணையின் வாக்குமூலம் ஆகியவற்றை படித்து பார்த்து கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். நானும், பிரதிவாதி முருகனும் உறவினர்கள் என்றால் சரிதான். எந்தெந்த தேதிகளில் பிரதிவாதி என்னிடம் ரூ. 50 லட்சம் கடன் வாங்கினார் என்ற விபரத்தை தேதி வாரியாக நான் குறிப்பிட்ட பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. 2008ம் ஆண்டிலிருந்து கொடுக்கல், வாங்கல் எனக்கும், பிரதிவாதிக்கும் உள்ளது. நிறைய வியாபாரத்தில் என்னை பங்குதாரராக சேர்ப்பதாக சொல்லி பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கி இருந்தார். நேரடியாக நானும், பிரதிவாதியும் உட்காந்து பேசும் போது சுமார் ஒரு கோடி ரூபாய் வரை என்னிடம் பிரதிவாதி கடன் வாங்கி இருந்ததை நாங்கள் உறுதி செய்தோம். அதில் ரூ.50 லட்சம் பிரதிவாதி திருப்பி கொடுத்துள்ளார். பாக்கி ரூ. 50 லட்சம் என்று பிரதிவாதி ஒப்புக்கொண்ட காரணத்தினால் அதன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

3. 2008 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை பிரதிவாத என்னிடம் பல தேதிகளில் பணம் வாங்கினார் என்ற விபரத்தை நான் தாக்கல் செய்த பிராதில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கு வைத்து பணம் வாங்கப்பட்டது, அது சம்பந்தமாக எங்கு வைத்து ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்ற விபரமும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பணம் வாங்கிய விவரம் தெரியும் அவர் அதை ஆட்சேபனை செய்யவில்லை என்பதால் நான் அதை பற்றி குறிப்பிடவில்லை.

2008 ஆம் ஆண்டிலிருந்து பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கியதாக கூறுவது பொய் என்றும், வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. 2015–ம் ஆண்டு நவம்பர் மாதம் நானும், பிரதிவாதியும் உட்கார்ந்து பேசும்போது எங்களைத் தவிர வேறு நபர்கள் யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். அவ்வாறு 2015 ஆம் ஆண்டு நாங்கள் பேசும்பொழுது உறவினர்களும் பெரியவர்களும் இருந்ததாக சொன்னால் அது தவறு என்றால் சரியல்ல, இருந்தார்கள்.

5. கணக்குப் பார்த்துவிட்டு கையெழுத்து போட்டு கொடுக்கும் போது பிரதிவாதியின் மாமனார் மற்றும் உறவினர்கள் இருந்தார்கள். அவரது தாய் மாமா ஜெயபாலனும் இருந்தார், அவருக்கு முழு விவரமும் தெரியும். தங்கராஜ் என்பவரின் மகன் ராஜ்குமார் இருந்தார், அவருக்கும் கணக்கு தெரியும். மேலும் மனோகரன் என்ற மற்றொரு உறவினர் இருந்தார். எனது காட்டில் வேலை செய்யும் அன்பு (எ) மக்கள் அன்பன் இருந்தார். நவம்பர் மாதம் 2015 ஆம் தேதி என்று நாங்கள் பேசும்போது ரூ.65 லட்சம் பணம் தருவதாகவும், 8 சென்ட் நிலம், மற்றும் குடோன் நான் வாங்கிக் கொடுத்ததை எனக்கு அவர் கிரையம் செய்து தருவதாக தான் பேசப்பட்டது.

6. அந்த தேதியில் அவ்வாறு பேசிக்கொண்டது தொடர்பாக ஆவணங்கள் ஏற்படுத்திக் கொண்டோம், அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அதனால் தான் அந்த ஆவணம் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 30.12.2015–ம் தேதிக்குள் பணம் செலுத்தி விடுவதாகவும், மேற்கண்ட ரூபாய்க்கு 1.50 வட்டியும், அசலும் சேர்த்து பிரதிவாதி எனக்கு கொடுப்பதாக நான் பிராதில் சொல்லியுள்ளேன். அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. பிரதிவாதி எனக்கு எழுதிக் கொடுப்பதற்காக ஒப்புக்கொண்ட சொத்து எந்த சர்வே எண் மற்றும் எந்த வார்டில் அமைந்துள்ளது என்ற விபரம் என்னால் சொல்ல முடியுமா என்றால், எனக்கு அந்த சர்வே நம்பர் ஞாபகமில்லை. TVS ஒர்க்ஷாப்பிற்க்கு எதிரில் அந்த சொத்து அமைந்துள்ளது. ஒப்புக்கொண்ட ரூ.50 லட்சம் பணத்தில் ரூ.30 லட்சம் பிரதிவாதி கொடுத்துவிட்டார் என்பதுதான் எனது வாதம் என்றால் சரிதான், 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இருந்து ஜூலை 2017 ஆம் வருடம் வரை மேற்கண்ட தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்பது தான் எனது வாதம் என்றால் சரிதான்.

8. பாக்கி பணம் கொடுக்க வேண்டியது ரூ.20 லட்சம் தான் என்றால் சரியல்ல. ரூ.20 லட்சம் மட்டும் பாக்கி கிடையாது, 8 சென்ட் நிலம் உள்ளது. அது அல்லாமல் HDFC வங்கியில் அவருக்கு நான் லோன் வாங்கி கொடுத்தது ரூ.15 லட்சம் அந்தத் தொகையும் பிரதிவாதி எனக்கு செலுத்தவில்லை. பிரதிவாதி எனக்கு பாக்கி ரூ.35 லட்சம் செலுத்த வேண்டும் என்றால் சரிதான்.

9. பிரதிவாதி எனக்கு ரூ.50 லட்சம் தான் தர வேண்டும் என்று நான் வழக்கில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. நான் ரூ.50 லட்சம் மட்டும் கேட்கவில்லை, நான் ரூ. 50 லட்சம் பணமும், 8 சென்ட் நிலமும் வங்கியில் கடன் வாங்கி கொடுத்த பணம் திருப்பி கொடுக்க வேண்டும் என்று தான் கேட்டுள்ளேன். 15.09.2019-ம் தேதியன்று பிரதிவாதியிடம் புரோநோட் வாங்கியதாக சொல்லும் நான் எத்தனை புரோநோட்டுகள் வாங்கப்பட்டது என்றால் மொத்தம் அன்றைய தினம் என்னிடம் பிரதிவாதி 13 புரோநோட்டுக்கள் கொடுத்தார்.

10. அந்த புரோநோட் முழுவதும் தேதி உட்பட எல்லா விபரங்களும் பூர்த்தி செய்துதான் என்னிடம் கொடுத்தார் கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுக்கவில்லை. அந்த 13 புரோநோட்டுகளிலும் எவ்வளவு தொகை பூர்த்தி செய்யப்பட்டது என்றால் பத்து புரோநோட்டில் தலா ரூ.9 லட்சம் என்றும், மூன்று புரோநோட்டில் தலா ரூ.3 லட்சம் என்றும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்தப்

புரோநோட்டுகளில் யார், யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

11. அவ்வாறு புரோநோட் எழுதும்போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான், முருகன், முருகன் அழைத்து வந்த பத்திர எழுத்தர் ஆகியோர்கள் இருந்தோம். இந்த 13 புரோநோட்டுகள் தவிர்த்து வேறு புரோநோட்டுகள் எதுவும் பிரதிவாதி என்னிடம் கொடுத்திருந்தாரா என்றால் எத்தனை 7 புரோ நோட்டுகள் கொடுத்திருந்தார். அது 2021 ஆம் ஆண்டு கொடுத்தார், அது சென்னையில் வைத்து கொடுக்கப்பட்டது.

12. தற்போது நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் 13 புரோ நோட்டுகளை பிரதிவாதி என்னிடம் கொடுத்த விபரத்தையும் 7 புரோநோட்டுகள் சென்னையில் வைத்து கொடுத்த விபரத்தையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.9 லட்சம் வீதம் 10 புரோநோட்டுகள் கொடுத்ததை எனது வங்கி கணக்கில் ரூ.90 லட்சம் பிரதிவாதி கொடுத்துவிட்டு அந்த ஒன்பது புரோ நோட்டுகளை பிரதிவாதி திரும்பப் பெற்றுச் சென்றார். தற்போது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள 3 புரோநோட்டுகள் தான் பாக்கி, தலா ரூ.3 லட்சம் வீதம் கொடுத்த புரோநோட்டுகள் அதனால் அது பற்றிய விவரங்களை நான் பிராதில் சொல்லவில்லை.

13. வங்கி மூலம் பிரதிவாதி தனது வங்கிக் கணக்கிலிருந்து எனது வங்கிக் கணக்கிற்கு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அவரது கணக்கில் இருந்து ரூ.90 லட்சம் எனது கணக்கிற்கு பணம் பரிவர்த்தனை செய்தார். எனக்கு மீதம் கொடுக்க வேண்டியது எனது கணக்குப்படி ரூ.35 லட்சம் என்னும் பட்சத்தில் எதற்காக ரூ.90 லட்சம் அவர் அனுப்பியதாக குறிப்பிடுகிறேன் என்றால் 2019 ஆம் ஆண்டு உட்கார்ந்து நாங்கள் கணக்கு பார்த்தபோது 8 சென்ட் நிலத்தையும் தானே எடுத்துக் கொள்வதாக பிரதிவாதி பேசினார் எல்லாவற்றையும் சேர்த்து கணக்கு பார்த்து ஒரு கோடியே, 20 லட்சம் ரூபாய் தர வேண்டும் என முடிவு செய்யப்பட்டு அதன்

அடிப்படையில் தான் பிரதிவாதி எனக்கு ரூ.90 லட்சம் பண பரிவர்த்தனை தனது வங்கி கணக்கில் இருந்து எனக்கு அனுப்பினார்.

14. பிரதிவாதி எனக்கு கொடுத்திருந்த 10 புரோநோட்டுகள் ரூ.9 லட்சம் வீதம் எழுதிக் கொடுத்ததை அந்த பணத்தை எனக்கு கொடுத்த பிறகு திரும்பி பெற்றுச் சென்றார்.பிரதிவாதி என்னிடம் 50 லட்சம் ரூபாய் கடன் வாங்கி இருந்தார் என்றும் அதற்கு வட்டியுடன் சேர்த்து ரூ. 90 லட்சம் என்று என்னிடம் கொடுத்தார் என்று நான் பிராதில் சொல்லி இருந்தால் அது தவறு. எனக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் வழக்கம் கிடையாது.

15. கடந்த 2012 ஜூன் மாதம் 3 ஆம் தேதியன்று பிரதிவாதி என்னிடம் ரூ. 15 லட்சம் நூற்றுக்கு இரண்டு ரூபாய் வட்டிக்கு என்னிடம் பணம் கடன் வாங்கி இருந்தார் என்றால் என்னிடம் ரூ.15 லட்சம் பிரதிவாதி கடன் வாங்கி இருந்தார் அதை வைத்து அவர் கொப்பரை தேங்காய் விற்பனை செய்து வியாபாரம் செய்ய போவதாக சொல்லி இருந்தார். அதற்காக நான் பணம் கொடுத்தேன், அதில் வரும் லாபத்தில் எனக்கு பங்கு தருவதாக பிரதிவாதி சொல்லியிருந்தார். நான் கூறுவது போல் தேங்காய் வியாபாரத்தில் ஈடுபடுவதாக பிரதிவாதி சொல்லி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும், நூற்றுக்கு இரண்டு ரூபாய் என்ற அடிப்படையில் கடனாக பிரதிவாதி பணம் வாங்கினார் என்றால் சரியல்ல.

16. அன்றைய தேதியில் 10 புரோநோட்டுகளில் பூர்த்தி செய்யாமல் என்னிடம் அந்த கடனுக்கு ஆதரவாக புரோநோட்டிற்கு கையெழுத்து போட்டு பிரதிவாதி என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு பிரதிவாதி முறையாக அந்த கடனுக்கு வட்டி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. அவர் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை வங்கி மூலமாக அனுப்ப வேண்டும் என்று தான் நான் பிரதிவாதியிடம் சொல்லி இருந்தேன். கையில் நான் பணமோ வட்டியோ வாங்கியது கிடையாது.

17. பிரதிவாதிக்கு விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தினால் அவரால் வட்டி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர்

விவசாயத்திற்காக கடன் வாங்கவில்லை, வியாபாரத்திற்காக கடன் வாங்கினார். பிரதிவாதி நான் மற்றும் பிரதிவாதியின் உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து பேசி ரூ.15 லட்ச ரூபாய் மற்றும் அதற்கான வட்டியும் சேர்த்து பிரதிவாதி தருவதாக சொல்லி பதிவில்லாத ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. 2016 ஆம் ஆண்டு ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம். இதில் நான் கையெழுத்து செய்யவில்லை என்பதால் அந்த ஒப்பந்தம் குறித்து என்னால் சொல்ல முடியாது.

18. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான்கு மாதத்திற்கு ஒருமுறை ரூ.10 லட்சம் பிரதிவாதி செலுத்த வேண்டும் என அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தம் 18.07.2016–ம் தேதியன்று ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அந்த சம்பந்த பத்திரத்தின் அடிப்படையில் ரூ. 29 லட்சம் பிரதிவாதி எனது வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல, பிரதிவாதி எனது வங்கிக் கணக்கிற்கு ரூ.30 லட்சம் அனுப்பினார், ஆனால் அது இந்த ஒப்பந்தத்திற்கான தொகை கிடையாது.

19. மொத்தம் ரூ.30 லட்சத்தில், ரூ. 29 லட்சம் எனது வங்கிக் கணக்கிற்கு பிரதிவாதி அனுப்பிவிட்டு பாக்கி ஒரு லட்ச ரூபாயை கம்பத்தில் உள்ள எனக்கு சொந்தமான இடத்தினை அப்துல் கபூர் என்பவருக்கு வாடகைக்கு விட்டு அந்த ஒரு லட்ச ரூபாயை அப்துல் கபூருக்கு கொடுத்துவிட்டு அந்த அசல் ஒப்பந்தத்தை வாங்கி வைக்கும்படி சொன்னதன் அடிப்படையில் அந்த ஒரு லட்ச ரூபாயை அப்துல் கபூரிடம் கொடுத்துவிட்டு அந்த வாடகை ஒப்பந்தத்தை பிரதிவாதி வாங்கி வைத்திருந்தார் என்றால் சரியல்ல.

20. அந்த வாடகை ஒப்பந்தம் தான் தற்போது என்னிடம் காண்பிக்க கூடிய ஆவணம் என்றால் சரியல்ல, அதனால் பிரதிவாதி என்னிடம் அசல் மற்றும் வட்டி தொகைக்கான ரூ.15 லட்சம் ரூபாய்க்கான முழு பணத்தையும் திருப்பி செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. ரூ.30 லட்சத்தை பிரதிவாதி திருப்பி செலுத்திய போது 10 புரோநோட்டுகளை பிரதிவாதி கேட்டபோது நான்

சென்னையில் இருப்பதாகவும், வரும்போது கொடுப்பதாக சொன்னேன் என்றால் சரியல்ல.

21. நான் பிரதிவாதியின் உறவினர் என்பதாலும் உயர்ந்த பதவியில் நான் இருப்பதாலும் நம்பிக்கையின் அடிப்படையில் அதை பெரிது படுத்தாமல் பிரதிவாதி விட்டுவிட்டார் என்றால் சரியல்ல. நான் 2021 ஆம் ஆண்டு பிரதிவாதியிடம் எனக்கு சொந்தமான 15 ஏக்கர் 90 செண்ட் நிலத்தை கிரையம் செய்ய வேண்டும் என்றும் யாராவது தெரிந்தவர்கள் இருந்தால் அழைத்து வாருங்கள் என்று பிரதிவாதியிடம் சொன்னேன் என்றால் சரியல்ல.

22. நான் சொன்னதன் அடிப்படையில் பிரதிவாதி அவருக்கு வேண்டிய நபர்களான மனோகரன் மற்றும் ராஜசேகரன் என்ற இரண்டு நபர்களை தென்னந்தோப்பு வாங்குவதற்கு தயாராக இருப்பதாக என்னிடம் அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. நான் சொல்லி அவர்களை அழைத்து வரவில்லை, ஆனால் பிரதிவாதி அந்த நபர்களை என்னிடம் அழைத்து வந்தது உண்மைதான். நான் சொல்லித்தான் பிரதிவாதி அந்த நபர்களை என்னிடம் அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் ஒரு குழி தென்னந்தோப்பு ரூ.7 லட்சம் என்று பேசப்பட்டது என்றால் மொத்தம் ஒரு கோடியே, 85 லட்சத்தி, 50 ஆயிரம் ரூபாய் என்று பேசி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, அது வேறு, இது வேறு.

23. அதன் அடிப்படையில் மனோகரன் மற்றும் ராஜசேகன் இருவரும் என்னிடம் ரூ. 49 லட்சம் முன்பணம் கொடுத்துவிட்டு கிரையம் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை. ரூ. 49 லட்சம் பிரதிவாதி மேற்கண்ட மனோகரன் மற்றும் வாங்கித் தான் ஒப்பந்தம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தத்தில் நானும் எனது மகளும் கையெழுத்து போட்டு உள்ளோம் என்றால் சரியல்ல, அவர்கள் என்னிடம் பணமே கொடுக்கவில்லை.

24. அந்த ஒப்பந்தத்தில் பிரதிவாதி முருகன் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் முருகன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளது

உண்மைதான், ஆனால் அந்த வழக்கு வேறு, இந்த வழக்கு வேறு. அந்த ரூ.90 லட்சம் ஒப்பந்த பணத்தை ராஜசேகர் மனோகரன் அவர்கள் நேரடியாக கொடுக்க வேண்டாம் என்றும், பிரதிவாதி வாயிலாக அந்த பணத்தை கொடுங்கள் என சொன்னதன் பெயரில் பிரதிவாதி அந்த பணத்தை வாங்கி எனது வங்கி கணக்கு அனுப்பினார் என்றால் சரியல்ல.

25. ஏற்கனவே முருகன் எனக்கு பணம் தர வேண்டும் என்ற அடிப்படையில் அவர் தான் எனக்கு பணத்தை அனுப்பினார். அது கிரைய முன் பணம் கிடையாது. இது சம்பந்தமாக பிரதிவாதி எனக்கு எதிராக தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் தெரிவித்தார் என்றால் சரிதான். அந்தக் கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி எனக்கு சாதகமாக இருக்க வேண்டுமென நான் கேட்டுக் கொண்டேன் என்றால் சரியல்ல.

26. அவ்வாறு பிரதிவாதி எனக்கு சாதகமாக இல்லாத காரணத்தினால் தான் அவர் ஏற்கனவே என்னிடம் கொடுத்து இருந்த 10 புரோநோட்டுகளை நான் தவறுதலாக பயன்படுத்தி அவருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 03.05.2022-ம் தேதியன்று பிரதிவாதி நகை வியாபாரம் செய்ய இருப்பதாக சொல்லி என்னிடம் ரூ.3 லட்சம் கடன் கேட்டதாக நான் சென்னை சிட்டி சிவில் கோர்ட் நீதிமன்றத்தில் பிரதிவாதிக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல, அது பொய். 7 புரோநோட்டுகள் அடிப்படையில் நான் சென்னை சிட்டி சிவில் கோர்ட் நீதிமன்றத்தில் பிரதிவாதி எனக்கு பணம் தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல, அது பொய்.

27. HDFC வங்கியில் வாங்கி கொடுத்த கடன் தொகையை பிரதிவாதி திருப்பி செலுத்தாமல் இருந்த காரணத்தினால் அவர் எனக்கு கொடுக்க வேண்டியிருந்த ரூ.21 லட்ச பணத்தை புரோநோட்டு வாயிலாக பிரதிவாதி சென்னைக்கு வந்து என்னிடம் அந்த புரோநோட்டுகளை கொடுத்ததன்

காரணமாக நான் அந்த வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கின் எண். 8437/2022 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் பிரதிவாதி தோன்றாத தரப்பினராக இருந்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

28. பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கிக் கொண்டு புரோநோட் எழுதி கொடுத்ததாக அந்த வழக்கில் சொல்லி உள்ள விபரங்களை இந்த வழக்கில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்பதால் குறிப்பிடவில்லை நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல, அதற்கு ஆதரவாக இந்த தாவா புரோநோட்டு எனக்கு எழுதி தரவில்லை என்றால் சரியல்ல.

29. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டானது சட்டப்படியான மறுபயனுக்கோ ஏற்படுத்தப்பட்டதல்ல. எனக்கு சாதகமாக பிரதிவாதி செயல்படவில்லை என்ற காரணத்தினால் மோசடியாக இந்த தாவா புரோநோட் உருவாக்கி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.26 16:16:09 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.